# நமது ஈழநாடு

www.namathueelanadu.com





குரல் 06 மலர் 64 ஒக்டோபர் 2025 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com


Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app

நாம் துணிந்து போராடுவோம், சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கின்றது,
வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கின்றது.

- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்





# பிரித்தானியாவின் புதிய பிரேரணை



# பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏமாற்றம்

**தாயகன்**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா தொடர்பாக அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுடன் ஒப்பிடுகையில், வலுவான ஒன்றல்ல என்றே கூறலாம். இத்தீர்மானம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கக்கூடிய அல்லது வெளிப்புறத் தலையீட்டு அச்சுறுத்தல்களைக் கொடுக்கக்கூடிய விடயங்களை உள்ளடக்கவில்லை.

குறிப்பாக, 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய 30ஃ1 தீர்மானம், வெளிநாட்டு நீதிபதிகள், வழக்குத்தொடுநர்கள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய கலப்பு விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என நேரடியாக அழுத்தம் கொடுத்திருந்தது.

அத்தகைய அழுத்தங்கள் கூட தற்போதைய தீர்மானத்தில் கொடுக்கப்படவில்லை. அப்படிப் பார்த்தால், இது பொறுப்புக்கூறல் விடயத்தில் பின்நோக்கித் திரும்பிய தீர்மானம் என்றே கருதலாம். தற்போதைய தீர்மானம் ஒரு பக்கச்சார்பற்ற, சுயாதீன விசாரணைப் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்று மாத்திரம் வலியுறுத்துகிறது. அதில் வெளிநாட்டு நிபுணர்கள் பங்கேற்பதன் அவசியம் கூட வெளிப்படையாக வலியுறுத்தப்படவில்லை.

ஆகவே தற்போதைய சிறிலங்கா அரசாங்கம் இந்தத் தீர்மானத்தைத் தனக்குக் கிடைத்துள்ள வெற்றியாகக் கொண்டாடக்கூடும். ஏனெனில், சிறிலங்கா அரசாங்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு உள்நாட்டுப் பொறிமுறைகளின் ஊடாகத் தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதியை அளித்திருக்கிறது. அதன் அடிப்படையில்தான், வெளிநாட்டுத் தலையீடுகளுடன் கூடிய பொறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்ற விடயம் இந்தத் தீர்மானத்தில் உள்ளடங்கவில்லை.அத்துடன், அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறியுள்ள சூழலில், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற பிரித்தானியா, கனடா உள்ளிட்ட அனுசரணை நாடுகளுக்குக் கடும் சவாலான சூழல் நிலவியது. இதன் காரணமாக, தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பல திருத்தங்கள் செய்யப்படுவதற்கும், விட்டுக்கொடுப்புகள் மற்றும் சமரசங்களுக்கு உட்படுவதற்கும் காரணமாக அமைந்தது. இதுவே தீர்மானத்தின் வலு குறைந்ததற்கான முக்கிய காரணமாகும்.

நீர்த்துப்போன தீர்மானத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏமாற்றம் பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழர்களைப் பொறுத்தவரையில், இது ஒரு நீர்த்துப்போன, ஏமாற்றம் தரும் தீர்மானமேயாகும். இருப்பினும், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வராமல் தடுப்பதற்கு அல்லது தவிர்ப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி வெற்றி அளிக்கவில்லை என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

இந்தத் தீர்மானம் சிறிலங்காவை அடுத்த இரண்டு ஆண்டுகள், ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் பணியகத்தின் கண்காணிப்பில் வைத்திருப்பதற்கு வழி வகுத்திருக்கிறது. அதற்கு, 51ஃ1 தீர்மானத்தின் ஆணையைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு அங்கிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

51ஃ1 தீர்மானத்தின் அடிப்படையில்தான் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால், சிறிலங்கா பொறுப்புக்கூறல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதனை முன்னெடுப்பதற்கு சிறிலங்கா கடுமையான எதிர்ப்பை வெளியிட்டதுடன், சீனா, கியூபா, எதியோப்பியா போன்ற நாடுகளும் இந்த வெளிப்புறத் தலையீட்டுக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டிருந்தன.

இது நிதியை வீணடிக்கும் செயற்பாடு என்றும், முன்னுதாரணமற்ற ஒரு நடவடிக்கை என்றும் சிறிலங்கா சார்பில் விமர்சிக்கப்பட்டது. ஆனால், இந்தத் தீர்மானத்தில் சிறிலங்கா பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் ஆணையை நீடிப்பது தொடர்பாக வெளிப்படையாக எதுவும் கூறப்படவில்லை. அதற்குப் பதிலாக, '51ஃ1 தீர்மானத்தின் ஆணையை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது' என்ற சொல்லாடலின் மூலமாக முன்னைய ஆணை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வகையில் சிறிலங்காவின் எதிர்ப்பை மீறி, பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டதன் பின்னணிஇலங்கை எதிர்த்திருந்தாலும், இலங்கையின் நட்பு நாடுகள் இது வீண் முயற்சி எனக் கூறியிருந்தாலும், இந்தத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்காக வாக்கெடுப்பைக் கோருவதற்கு எந்த நாடும் முன்வரவில்லை. உண்மையில், இந்தத் தீர்மானத்தைப் பிரித்தானியா முன்வைப்பதற்கு முன்னரே, சிறிலங்கா அரசாங்கம் அதனுடன் பேரம் பேசத்தொடங்கிவிட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதை இடைநிறுத்தி வைக்குமாறு கோரியது.

ஆனால், பிரித்தானியா அதற்கு விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் ஆணையை நீடிக்கும் வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அது உறுதியாக இருந்தது. இரண்டு ஆண்டுகள் கண்காணிப்பு நிலையில் இருந்து விடுபடும்போது, பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் செயலற்றுப் போய்விடும் ஆபத்து இருந்தது. ஐ.நா.வின் பொறுப்புக்கூறல் செயற்திட்டத்திடம் உள்ள ஆவணங்களும் ஆதாரங்களும் அழிக்கப்படுவதற்கோ அல்லது பயனற்றுப் போவதற்கோ வாய்ப்புகள் இருந்தன.

அதற்கு இடமளிப்பதில்லை என்பதில் பிரித்தானியா உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. இந்த அமர்வில் தீர்மானத்தை முன்வைத்து உரையாற்றிய பிரித்தானியாவின் ஐ.நாவுக்கான உயர்ஸ்தானிகர் குமார் ஐயர், திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களில் ஒருவரான ரஜீகரின் தந்தையான மருத்துவர் மனோகரன் அண்மையில் நீதிக்காகப் போராடி வெற்றிபெற முடியாத நிலையில் மரணமடைந்ததைக் குறிப்பிட்டு, நீதியை பெற்றுக்கொடுக்கும் முயற்சிகள் அவசரமானவை என்பதை உணர்வுபூர்வமாக வலியுறுத்தியது.

இதுபோன்ற சூழல் இரண்டு ஆண்டுகளுக்குத் தீர்மானத்தை இடைநிறுத்தி வைக்கும் சிறிலங்காவின் கோரிக்கையை வலுவற்றதாக்கியிருந்தது. தீர்மான வரைவு மூன்று முறை மாற்றப்பட்டு, நீர்த்துப் போகும் நிலையை எட்டியபோதும், வாக்கெடுப்பின்றி நிறைவேற்றுவதற்கே கடும் பிரயத்தனம் எடுக்கப்பட்டது. வாக்கெடுப்புக்கு விடப்படுவதை சிறிலங்கா தவிர்த்துக் கொண்டது போலவே, பிரித்தானியாவுக்கும் அதில் தயக்கம் இருந்தது.

ஏனென்றால், வாக்கெடுப்பின்போது இலங்கைக்குச் சார்பான சூழலை அதிகரிக்கச் செய்துவிடும் ஆபத்தும் அதில் காணப்பட்டது. கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்த நாடுகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. 2012ஆம் ஆண்டு 15 நாடுகள் எதிர்ப்பு வெளியிட்டன. 2013ஆம் ஆண்டு 13 நாடுகள் எதிர்ப்பு வெளியிட்டன. 2014ஆம் ஆண்டு 12 நாடுகள் எதிர்ப்பு வெளியிட்;டன. 2021ஆம் ஆண்டு 11 நாடுகள் எதிர்ப்பு வெளியிட்டன. 2022ஆம் ஆண்டு 7 நாடுகள் எதிர்ப்பு வெளியிட்டன. 2023ஆம் ஆண்டு தீர்மானத்தை எதிர்த்து 12 நாடுகள் வாக்களித்தபோதும், அதனைத் தடுக்க முடியவில்லை.

இந்த முறை, இலங்கை மற்றும் அதன் நட்பு நாடுகளின் எதிர்ப்புப் பதிவு செய்யப்பட்டாலும், வாக்கெடுப்பின்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்திற்கு வாக்கெடுப்பைக் கோருவதற்கு இலங்கை தயாராக இருக்கவில்லை. நட்புக் நாடுகளிடம் அதுபற்றிய கோரிக்கையையும் விடுக்கவில்லை. இதன் மூலம், எந்த நாட்டின் எதிர்ப்பும் இல்லாமல் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற பதிவே காணப்படும். அதேசமயம், சிறிலங்கா அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை நிராகரித்திருக்கிறது. அதன் உள்ளடக்கங்களை ஏற்றுக்கொள்ள முடியாதென அறிவித்திருக்கிறது.

அப்படியானால், இது சிறிலங்காவுக்குச் சாதகமற்றதொரு தீர்மானம். அப்படிப்பட்ட தீர்மானத்தை சிறிலங்காவினால் தடுக்க முடியவில்லை. எதிர்த்துத் தோற்கடிக்க முடியவில்லை. அதனால் இதனை சிறிலங்காக்குச் சாதகமானது என்று கூற முடியாது. அதே வேளை, தமிழர் தரப்பை பொறுத்தவரையில், இந்தத் தீர்மானம் வலுவற்ற ஒன்றாக, நீர்த்துப்போன ஒன்றாக, வலுவான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டும் ஒன்றாக இல்லை.

சிறிலங்கா அரசாங்கம் எதிர்க்கின்ற தீர்மானம் என்பதற்காக இதனைச் சாதகமானது என்று கொண்டாட முடியாது. 'தனக்கு மூக்கு போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாக அமைந்து விட்டது" என்று இதைக் கொண்டாட முடியாது. தமிழர்கள் எதிர்பார்ப்பது, நீதியும் பொறுப்புக்கூறலுமே ஆகும். அதுதான் நிலையான நல்லிணக்கத்தையும் நிரந்தரமான அமைதியையும் ஏற்படுத்திக் கொடுக்கும்.

அந்த அடியை நோக்கி இந்தத் தீர்மானம் நகரவில்லை என்பது இதன் முக்கியமான தோல்வியாக இருக்கும். எனவே, இந்தத் தீர்மானம் ஐ.நா.கண்காணிப்பை இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து, பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் ஆணையை நீடித்ததன் மூலம் பிரித்தானியா தலைமையிலான நாடுகளுக்கு இராஜதந்திர வெற்றியாக இருக்கலாம். ஆனால், வலுவான பொறுப்புக்கூறல் பொறிமுறையின்மை மற்றும் உள்நாட்டுச் சமரசங்களுக்கு இடம் கொடுத்ததன் மூலம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இது பெரும் ஏமாற்றமே என்பதில் சந்தேகமில்லை.




# ஈழத் தமிழரை இனப்படுகொலை செய்ய ஐ.நா. துணை நின்றது

ஈழத் தமிழ் மக்கள் இன்று ஒடுக்கப்பட்டு உரிமை இழந்தவர்களாக வாழ்வதற்கு ஐ.நாவும் உடந்தையாக இருந்தத என்பது கசப்பான உண்மை. இன்னொருவகையில் சொன்னால் ஐ.நா கடமை தவறியதின் விளைவே இதுவெனலாம். இலங்கையில் காலம் காலமாக நிலவும் இன மேலாதிக்கம், இன ஒடுக்குமுறை என்பவற்றை தடுக்கத் தவறியதுடன், 2009 முள்ளிவாய்க்கால் இன அழிப்புப் போர், இனப்படுகொலைகள் என அனைத்தையும் தடுக்கத் தவறிய ஒரு அமைப்பாக கருதப்படுகின்ற ஐ.நா இலங்கை இனப் பிரச்சினையில் தோல்வி கண்ட அமைப்பாக காணப்படுகிறது.

### ஒக்டோபர் 24 ஐ.நா தினம்

உலகின் எல்லா உரிமைகளுக்கான தினத்தையும் பிரகடனம் செய்த ஐ.நாவுக்கான தினம் இதுவாகும். 1945 ஒக்டோபர் 24ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை தொடங்கப்பட்டது. உலகில் உள்ள நாடுகளின் அமைதி, மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் ஒரு அமைப்பாக தேசங்களை ஒன்றிணைக்கும் ஒரு உலக அரசாக ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது. இதன்படி ஐ.நாவில் 193 நாடுகள் தற்போது அங்கம் வகிக்கின்றன. இரண்டாம் உலகப் போரின் முடிவில் இன்னுமொரு உலகப் போர் நடைபெறாத வகையில் அமைதியை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்டோல் ஐக்கிய நாடுகள் சபையை தோற்றுவித்தார். வொஷிங்டனில் நடந்த டெம்பார்ட்டன் ஒக்ஸ் மாநாட்டைத் தொடர்ந்து இது போன்றதொரு நாளில் கலிபோனியாவில் உள்ள சான் பிரான்சிஸ்கோவில் ஐக்கிய நாடுகள் சபை தொடங்கப்பட்டது.1946இல் இலண்டனில் முதல் பொதுச்சபை கூடியது. இதில் 51 நாடுகள் பங்கெடுத்தன. 2010ஆம் ஆண்டில் 192 நாடுகள் அங்கம் வகித்த ஐ.நாவில் 2011இல் தென்சூடான் விடுதலை பெற்று ஐ.நாவுடன் இணைய 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

### ஐ.நாவின் நோக்கங்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கமாக பின்வருவன கூறப்படுகின்றன. 01. கூட்டு நடவடிக்கைகளின் மூலம் ஆக்கிரமிப்புகளை ஒடுக்குதல்; 02. பன்னாட்டுச் சட்டங்களின் படி நாடுகளுக்கிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து உலக அமைதியை ஏற்படுத்துதல். 03. மக்களின் சம உரிமைகளையும் சுயநிர்ணய உரிமைகளையும் மதித்தல் மனிதனின் உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் காத்து, இன மொழி அல்லது சமய வேறுபாடுகளை நீக்கிப் பன்னாடுகளின் சமுதாய பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல். 04. இந்நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் சமமானவர்களே. 05. உறுப்பு நாடுகள் தங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை உலக அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் ஆபத்து ஏற்படாத வகையில் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும். 06. உறுப்பு நாடுகள் எக்காரணம் கொண்டும் பிற நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடக் கூடாது.

ஐக்கிய நாடுகள் சபையைப் பொறுத்தவரையில் மக்களின் சம உரிமைகளையும் சுயநிர்ணய உரிமைகளையும் மதித்தல் மனிதனின் உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் காத்து, இன மொழி அல்லது சமய வேறுபாடுகளை நீக்கிப் பன்னாடுகளின் சமுதாய பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் என்ற நோக்கை ஈழத் தமிழர்களின் போராட்ட விடயத்தில் எவ்வாறு அணுகியது என்பதை உலகறியும். சம உரிமை மறுக்கப்பட்டு, தமது சுய உரிமைக்காக போராடிய ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதில் ஐ.நா வல்லாதிக்க நாடுகளின் நோக்கிற்கு துணைபோனது.

### ஐ.நாவின் அணுகுமுறை

நாடுகளுக்கு இடையிலான பிரச்சினைகளை மாத்திரமின்றி, நாடுகளுக்குஉள்ளே நடக்கும் பிரச்சினைகளிலும், இனங்களின் ஒடுக்குமுறைகளிலும் ஐக்கிய நாடுகள் சபை அந்தந்த மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்காமல் வல்லாதிக்க நாடுகளின் துணைக் கருவியாக செயற்படுகின்றன. ஈழத் தமிழர்கள் வரலாற்று ரீதியாக தனித்துவமான இனம். அவர்களை பாரம்பரியமாக தங்களை தாங்களே ஆண்டு வந்தனர். பிரித்தானியர் ஆட்சியின் பின்னர் தமிழர் அதிகாரம், உரிமை எல்லாம் சிங்கள மேலாதிக்கத்தின் வசமானது.

ஈழத் தமிழர்களையும் இலங்கையர் என்ற அடையாளத்திற்குள் தள்ளி அவர்களின் சம உரிமையை மறுத்து, அவர்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து, அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக நடாத்தி, அவர்களை இன அழிப்புச் செய்யும் ஒரு அரசின் பார்வையிலேயே ஐ.நா ஈழத் தமிழர்களையும் பார்ப்பதாக காட்டுகிறது. போராடும் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஐ.நாவின் இப் பார்வையும் அணுமுறையும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அத்துடன் பெரும் அரசியல் சூழச்சி கொண்ட அணுகுமுறையாகும்.


தீபச்செல்வன்

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக முப்பது ஆண்டுகளுக்க மேலாக இன ஒடுக்குமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1983இலும் அதற்குப் பிந்தைய கால போர் நடவடிக்கைகளிலும் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதுடன் 2006இலிருந்து 2009 வரையான காலப் பகுதியில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் வடகிழக்குப் பகுதியில் இனப்படுகொலை நடவடிக்கை மிகவும் விஸ்தரிக்கப்பட்டது. இனவாத மேலாதிக்கப் போக்கின் கடும் விளைவாகவும் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும் பொருட்டும் 2008இன் இறுதிக் காலப் பகுதியிலும் 2009 மே வரையான காலப்பகுதியிலும் தமிழருக்கு எதிரான இனப்படுகொலை உச்சம் கண்டது.

### இனப்படுகொலையின் தாக்கம்

இனப்படுகொலை என்பது நிகழும் காலத்துடன் மாத்திரம் தொடர்புடையதன்று. அது வரலாற்று ரீதியான அரசியல் காரணங்களுடன் நிகழ்த்தப்படுவது. அதனுடைய பாதிப்பு என்பதும் இனப்படுகொலை நிகழும் காலத்துடன் முடிவடைதில்லை. இனப்படுகொலை ஒரு இனத்தை வரலாறு முழுவதும் உத்தரிக்கும் காயத்தை ஏற்படுத்துகிறது. எனவே இனப்படுகொலையை சந்தித்த ஒரு மண்ணில் அதற்கான காரணங்களை கண்டறிந்து, அதற்குரிய பிரச்சினைகை தீர்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கி அவர்களின் காயங்களை ஆற்றுதல் அவசியமாகிறது. இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட சமூகம் ஒரு உட்புண்ணுடன் வாழ நேரிடுகிறது. நியாயமான அணுகுமுறையும் நீதியுமே இங்கு அவசியமானது.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் முப்பது வருடங்களாக இன ஒடுக்குதல் மற்றும் இனப்படுகொலையினால் சந்தித்த அனுபவங்கள் காரணமாக உள் நாட்டில் நீதி கிடைக்கும் என்பதில் ஒரு போதும் நம்பிக்கை கொண்டதில்லை.

இதனால் முள்ளிவாய்க்காலில் இறுதிக் கட்ட யுத்தத்தில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு மாத்திரமின்றி வரலாறு முழுவதும் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட இன ஒழிப்புச் செயற்பாடுகளுக்கு சர்வதேச சமூகத்தை நோக்கி நீதியை எதிர்பார்த்திருக்கிறார்கள். இப்பூமியில் ஒரு இனத்திற்கு எதிராக திட்டமிட்ட ரீதியாக, மிக கூர்மையாக முன்னெடுக்கப்படும் இன ரீதியான ஒடுக்குதல் செயற்பாடுகளை குறித்து அக்கறை கொள்வதும் அதனை தடுப்பதும் அதன் வேர்களை கண்டறிந்து தீர்ப்பதும் அனைத்துலக மக்கள் சமூகத்தின் கடமை.

### ஈழ விவகாரத்தில் ஐ.நா

ஏனெனில் உலகில் நடைபெறும் எல்லா ஒடுக்குமுறைகளும் பூமி எங்கும் வாழும் எல்லா மனிதர்களையும் பாதிக்கிறது. பூமிப் பந்தின் ஏதோ ஒரு மூலையில் இடம்பெறும் இனப்படுகொலையை தடுக்கத் தவறும் பட்சத்தில் அதுவே இன்னொரு மூலையில் வாழும் ஒரு இனத்தை ஒடுக்க ஊக்கமளிக்கிறது.

எனவே இன ஒடுக்குதல் என்ற கொடுஞ்செயற்பாடு ஒரு இனத்தோடு முடிவதில்லை. கடந்த பல நூற்றாண்டுகளாக பூமியின் பல்வேறு பாகங்களிலும் பல இனங்கள் இன அழிப்பை சந்தித்து வந்துள்ளன. அதனை தடுக்கத் தவறிய செயற்பாடுகளும் அதற்கு நீதியை பெற்றுக்கொடுக்கச் தவறிய செயற்பாடுகளுமே இந்தப் பூமியில் மனித இனம் இன அழிப்பை மீண்டும் மீண்டும் சந்திக்கக் காரணமாகின்றது.

அவ் இன அழிப்புச் செயற்பாடு இப்போது ஈழத் தமிழ் மக்களின் விடயத்திலும் சூழல்கிறது. ஈழத் தமிழ் மக்கள் முப்பது ஆண்டுகளாக இன ஒடுக்குதல் மற்றும் இன அழிப்பை சந்தித்தபோது அதனை தடுக்கத் தவறிய விளையே முள்ளிவாய்க்காலில் உச்ச இனப்படுகொலை நிகழ்த்தக் காரணமானது. இப்போதும் தமிழ் இனம் சந்தித்த இனப்படுகொலையை எவ்வாறு இவ் உலகம் அணுகுகிறது என்பதற்கு ஐ.நாவின் செயற்பாடுகள் உதாரணமாகின்றன. தனது பூகோள நலன்களை மையாகக் கொண்டே தேசிய இனங்கள்மீதான ஒடுக்குமுறையையும் இன அழித்தல்களையும் உலகம் அணுகி வருகிறது. இன ஒடுக்குதல்களை மேற்கொள்ளும் மேலாதிக்க வாதிகளின் அணுகுமுறையைக் காட்டிலும் உலகின் இந்தச் செயற்பாடு படு பயங்கரமானதும், மனித உரிமைகளுக்கு விரோதமானதுமாகும்.

### ருவாண்டா இனப்படுகொலை

1994ஆம் ஆண்டில் ருவாண்டாவில் இனப்படுகொலை நடைபெற்றது மிகவும் வெட்ட வெளிச்சமாக தெரிந்தது. அந்நாட்டில் துட்சி இனத்தவர்களும் ஊட்டு மிதவாதிகளும் இன அழிப்புச் செய்யப்பட்டனர். அங்கு எட்டு லட்சம் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். பெரும்மையினரான ஊட்டு அரசு இனவாதக் கொள்கைகளைப் பரப்பி இன அழிப்புக்கு வித்திட்டது. கடந்த 2015ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குற்ற விசாரணை தீர்ப்பாயம் சுமார் 24 ஆண்டுகளின் பின்னர் இனப்படுகொலையில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனைணை அறிவித்தது. அத்துடன் ருவாண்டா இனப்படுகொலை விடயத்தில் ஐ.நா வெட்கப்படவேண்டும் என்று ஐ.நா செயலாளர் பான்கி மூன் கூறினார்.

உண்மையில் ருவாண்ட இனப்படுகொலையில் மாத்திரமல்ல, உலகின் அனைத்து ஒடுக்குமுறைகளுக்காகவும் ஐ.நா வெட்கப்படவேண்டும். வல்லாதிக்க நாடுகளின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவும், அரசியல் நலன்களுக்காக ஒடுக்குமுறைகளுக்கு ஒத்துழைப்பு புரிவதனாலும் ஐ.நா நிறையவே வெட்கப்படவேண்டும். இலங்கையில் யுத்தம் இடம்பெற்றபோது பாரிய ஆயுதங்களால் போரிட வேண்டாம் என்று இலங்கை அரசுக்கு ஐ.நா ஆலோசனை கூறியது. இலங்கையில் இன அழிப்பு நடைபெற்றபோது பாரிய ஆயுதங்களால் மக்களை கொல்லாமல் சிறிய ஆயுதங்களால் மக்களை கொல்லுங்கள் என்று ஐ.நா இனப்படுகொலைக்கு ஆலோசனை அளித்தது?

### இனப்படுகொலைக்கு உடந்தையாக ஐ.நா

இன அழிப்பு என்பது வெறுமனே ஆயுதங்களுடன் மாத்திரம் தொடர்புடையதா? ஐ.நா மேற்போந்த ஒத்துழைப்பை வழங்கியமையான் காரணத்தினால்தானா ஆயுதங்களை தவிர்த்து பாலியல் வன்முறை ஆயுதங்களும் காணாமல் போதல்களும் இடம்பெற்றன? இறுதியுத்தத்தில் ஈழத் தமிழ் மக்களால் ஆயுதங்களால் மாத்திரம் இனப்படுகொலை செய்யப்படவில்லை. அவர்களுக்கு எதிராக பாலியல் வன்முறைகளும் கொலைகளும் காணாமல் போதல்களும் பல்வேறு வழிமுறைகளில் இனப்படுகொலை நடந்தது. இலங்கையில் யுத்தம் இடம்பெற்றபோது ஐ.நா தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றத் தவறிவிட்டதாக சில ஆண்டுகளின் முன்னர் பான்கி மூன் கூறினார்.

இதேவேளை கடந்த 2013இல் ஐக்கிய நாடுகளின் 68ஆவது கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.நா செயலாளர் பான்கி மூன் இலங்கை விடயத்தில் ஐ.நா தோல்வியை தழுவியதாக குறிப்பிட்டார். இலங்கை இறுதி யுத்த உயிரிழப்புக்களுக்கு ஐ.நாவே பொறுப்புக் கூறவேண்டும் என்ற கருத்துக்கள் ஐ.நாவிற்குள் இருக்கும் மனித உரிமை சார்ந்த பலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு ஐ.நாவின் பங்களிப்பும் இருக்கிறது. இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்காக ஐ.நா வருந்துகிறது என்ற நிலைக்கு ஒரு நாள் அவ் அமைப்பு வரநேரிடும். அதுவும் பூகோள அரசியல் நலன் பொருட்டாய் இருக்கும் என்பதே கவலைக்குரியது.

ஐ.நா உள்ளிட்ட உலகம் எவ்வாறு பூகோள அரசியலுக்காக தமிழ் இனப்படுகொலையை ஏற்றுக்கொள்ள தயங்குகிறதோ அதைப்போலவே இலங்கை அரசு தன்னுடைய அரச இருப்புக்காக தமிழ் மக்களுக்கு நடந்த அநீதியை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறது. இது இலங்கையின் பேரினவாதப் போக்கை பேணும் ஒரு செயலாகவும் ஈழத் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகளை ஏற்றுக்கொள்ள மறுக்கும் செயலாகவும் தொடர்ந்தும் ஒடுக்குமுறையைக்கு வழி செய்யும் செயலாகவும் இருக்கிறது. அறுபது ஆண்டுகளாக இன ஒடுக்குதலை சந்தித்த இனம் உண்மையின் அடிப்படையிலும் நீதியின் அடிப்படையிலும் தீர்ப்பை எதிர்ப்பார்ப்பது மிகவும் அவசியமானது.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 06 மலர் 63 ஒக்டோபர் 2025 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# சிறிலங்கா அரசாங்கத்தின் இராஜ 'தந்திர' நாடகம்

சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கை, சிக்கலான புவிசார் அரசியல் அரங்கின் மையத்தில் உள்ளது. பூகோள வல்லரசுகளான சீனா மற்றும் இந்தியா ஆகியவற்றுடனான உறவுகளைச் சமன்செய்வதில் சிறிலங்கா அரங்கேற்றும் 'இராஜதந்திர சமநிலை நாடகம்', நாட்டின் எதிர்கால ஸ்திரத்தன்மைக்கு அவசியமான அதே வேளையில், அபாயகரமான சவால்களையும் உள்ளடக்கியது. பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் அண்மைய சீனா மற்றும் இந்தியாவுக்கான விஜயங்கள் இந்த சூட்சுமமான நகர்வை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன.

சீனாவுடனான உறவில் பொருளாதாரமே பிரதானமாகக் காணப்படுகிறது. உட்கட்டமைப்பு மேம்பாடு, பாரிய முதலீடுகள் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக, நாட்டின் கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டில் சீனாவின் ஆழமான மற்றும் தவிர்க்க முடியாத நிதி பலமே இந்த உறவின் அடித்தளம். கடனில் சிக்கித் தவிக்கும் சிறிலங்காவுக்கு, சீனாவின் 'மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சி' ஒரு பொருளாதார உயிர்நாடியாக மாறியுள்ளது.

இதற்கான அரசியல் விலையாக, 'ஒரு சீனா கொள்கை' மற்றும் உள்விவகாரங்களில் திடமான ஆதரவை சிறிலங்கா சீனாவுக்கு வழங்குவது தவிர்க்க முடியாத யதார்த்தம். இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தனது மூலோபாய ஆதிக்கத்தை உறுதிப்படுத்த சீனா விரும்பும் வேளையில், சிறிலங்காவின் துறைமுகங்கள் மற்றும் பாரிய திட்டங்களில் அதன் முதலீடுகள் அதன் அடுத்த நகர்வுக்கான படிக்கற்களாக அமைகின்றன.

சீனாவுடனானபொருளாதாரஈடுபாட்டின்அச்சுக்கலப்பிலிருந்து விடுபடவும், பிராந்திய அண்மையின் தவிர்க்க முடியாத உறவுகளை வலுப்படுத்தவும், பிரதமர் அமரசூரியவின் இந்தியா விஜயம் மிகவும் அவசியமானதாகிறது.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை, சீனாவின் பிரமாண்டமான திட்டங்களிலிருந்து மாறுபட்டு, கல்வி, ஆளணி அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் நேரடியாக அடித்தள மக்களைப் பயனடையச் செய்யும் நலத்திட்டங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

மலையக மக்களுக்கு வீட்டுரிமை ஆவணங்கள் வழங்கும் திட்டம் போன்ற மக்கள் மையப்படுத்திய இராஜதந்திர நகர்வுகள், இந்தியாவின் நல்லெண்ணத்தையும், வரலாற்றுப் பிணைப்பையும் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியை வெளிப்படுத்துகின்றன. இந்தியாவின் அணுகுமுறை, இலங்கையின் சமூககலாசாரப் பிணைப்புகளை வலுப்படுத்தி, மக்கள் மட்டத்தில் நம்பிக்கையை வளர்க்கும் நோக்கம் கொண்டது.

இந்த இரு வல்லரசுகளின் வேறுபட்ட ஈடுபாடுகள், உலகளாவிய மூலோபாயப் போட்டியின் நேரடிப் பிரதிபலிப்பாகும். பொருளாதாரப் பலம் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு மூலம் சீனா ஆதிக்கம் செலுத்த முனைகையில், இந்தியா தனது பிராந்திய அண்மை மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் மூலம் செல்வாக்கைத் தக்கவைக்க முயல்கிறது. இந்தச் சூழலில், இலங்கையின் இராஜதந்திரம் ஒரு 'கயிற்றின் மீது நடப்பது' போன்ற அபாயகரமான நிலையில் உள்ளது.

சிஙிலங்காவின் தேசிய நலனுக்காக இரு நாடுகளின் உதவிகளும் இன்றியமையாதவை என்பதை மறுப்பதற்கில்லை. பொருளாதார மீட்சிக்கு சீனாவின் நிதியுதவி தேவை, அதே சமயம் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கும், மக்கள் மட்டத்திலான வளர்ச்சிக்கும் இந்தியாவின் ஆதரவு அத்தியாவசியம். இந்த இக்கட்டான நிலையில், சிறிலங்கா அரசாங்கம் மிகுந்த விவேகத்துடனும், வெளிப்படைத்தன்மையுடனும் செயற்பட வேண்டும்.

சிறிலங்காவின் தற்போதைய வெளியுறவுக் கொள்கையின் பிரதான இலக்கு, எந்தவொரு வல்லரசின் பிராந்திய அல்லது அரசியல் நிகழ்ச்சி நிரலின் கருவியாக மாறாமல், தனது தேசிய நலன்கள் மற்றும் இறையாண்மையைத் தக்கவைத்துக் கொள்வதே ஆகும். ஒரு நாடு மற்றைய நாட்டின் சந்தேகத்தை அல்லது அதிருப்தியை சம்பாதிக்காமல், இருதரப்பு உறவுகளிலும் தனது சுயாட்சியைப் பேணுவதே தற்போதைய சவாலாகும்.

இந்த இராஜதந்திரச் சமநிலையைப் பேணுவதில் கிடைக்கும் வெற்றியே, சிறிலங்காவின் எதிர்காலப் பொருளாதார மீட்சிக்கும், நீண்டகால ஸ்திரத்தன்மைக்கும் வழிவகுக்கும். இருதரப்பு உறவுகளிலும் தனது சொந்த பாதையில் திடமாக நிற்பதன் மூலம் மட்டுமே, இலங்கை இந்தப் புவிசார் அரசியல் சவாலை வாய்ப்பாக மாற்றிக்கொள்ள முடியும்.

## யாழில் செம்மணி புதைகுழி உட்பட பல விடயங்களுக்கு நீதி வேண்டி கவனயீர்ப்பு போராட்டம்



சமவுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் பல கோரிக்கைகளை முன்வைத்து சனிக்கிழமை (01) யாழ்பாண நகரப் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி புதைகுழி விவகாரம், பயங்கரவாத தடைச் சட்ட விவகாரம், பட்டலந்தை வதை முகாம் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோரது விவகாரம், ஏனைய புதைகுழி விவகாரம் போன்றவற்றுக்கு உடனடி விசாரணைகளையும், நீதியையும் வேண்டி இந்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பி, "அனைத்து காணாமல் ஆக்கல்களுக்கும் இப்போதாவது நீதியை வழக்கு, செம்மணியை மீண்டும் புதைக்க இடம்கொடுக்காமல் உண்மையை வெளிப்படுத்து, மீண்டும் மீண்டும் அடக்குமுறைகள் வேண்டாம், பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனே நீக்கு, அனைத்து தேசிய இனங்களுக்குமான உரிமையை உறுதிசெய்" என்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் பௌத்த மதகுருக்கள், சமவுரிமை இயக்கத்தினர், வசந்த முதலிகே, சிங்கள மக்கள், தமிழ் மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து



# சிறிலங்காவின் ஜனாதிபதியாக அநுரகுமாரவின் ஓராண்டுப்பயணம்

தேசிகன்

செப்டம்பர் 21 அன்று அநுரகுமார திசாநாயக்க சிறிலங்காவின் ஜனாதிபதியாகப் பதவியேற்று வருடமொன்று நிறைவடைந்துள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சி, சிறிலங்கா அரசியல் வரலாற்றில்; முன்னோடியில்லாத பரிசோதனை நிலையில் உள்ளது.

சிறிலங்கா அரசியல் வரலாற்றில் இடதுசாரி கூட்டணி முதன்முறையாக அரசாங்கத்தை அமைத்துள்ளது. தேசிய மக்கள் சக்தி என்ற அரசியல் தரப்பின் மூலசக்தியான ஜே.வி.பி., பாரம்பரிய அரசியல் மற்றும் பொருளாதார உயரடுக்கிற்கு வெளியே இருந்தவொரு சக்தியாகும்.



கிராமப்புறநகர்ப்புற அடித்தள மக்களிடையே வேரூன்றிய இக்கட்சி, முன்னர் எதிர்ப்பு அரசியலின் அடையாளமாகவே பார்க்கப்பட்டது. 2024பொதுத் தேர்தலின் பின்னர், தேசிய மக்கள் சக்தியின் ஆணையில் மூன்று முக்கிய பரிமாணங்கள் உள்ளதாக விவாதிக்கப்பட்டது.

ஜனநாயகத்தை மீட்டெடுத்தல், நியாயமான பொருளாதார மீட்சியை உறுதி செய்தல், இன சமூகங்களுக்கிடையே சிறந்த உறவுகளை மேம்படுத்துதல். இவ்வாணையில் அரசாங்கம் எந்த அளவிற்கு உண்மையாகச் செயற்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஓராண்டு நிறைவில் பார்ப்பது முக்கியமான தருணமாக உள்ளது.

மக்கள் செல்வாக்கு ஜனநாயகப் புத்துயிர் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரத்தின் மையக்கருவாக இருந்தது. வலதுசாரித்துவ அரசியல் ஸ்தாபனத்தின் மீதான விமர்சனமாக இருந்தது. இந்தப் பாரம்பரிய எதிர்ப்புச் சிந்தனை, தேசிய தளத்திலிருந்த இரண்டு பிரதான கட்சிகளையும் ஒரே ஊழல்களுக்கு விலைபேனவையாகச் சித்தரித்தது.

இது 'மக்கள் நலவாதம்' என்ற அரசியல் அணுகுமுறையை ஒத்திருந்தது. வலதுசாரிப் பிரிவில் எதிர்மறை அர்த்தங்கள் இருந்தாலும், இடதுசாரி அல்லது முற்போக்கு மக்கள் நலவாதம் என்பது, அதிகாரத்தை கைப்பற்றியுள்ள உயரடுக்கினரை கேள்விக்குட்படுத்துவதன் மூலம் ஜனநாயக விழுமியங்களைப் புதுப்பிக்க உதவுகிறது.

இலங்கையில் கடந்த சில மாதங்களாக நடந்துள்ள நிகழ்வுகள், இந்த முற்போக்கு மக்கள் நலவாதத்தின் புத்துணர்ச்சியூட்டும் விளைவை உறுதிப்படுத்துகின்றன. தேசிய மக்கள் சக்தியின் மக்கள் செல்வாக்கு, இனவாத அல்லது மொழியியல் சிறுபான்மையினருக்கு எதிராக உணர்வுகளைத் திரட்டிய பொதுஜன பெரமுனவுக்கு மாறாக, அரசியல் ஸ்தாபனத்தை மக்களின் இறையாண்மையைப் பறித்த எதிரியாகச் சித்தரித்தது.

தேசிய மக்கள் சக்தியின் ஸ்தாபன எதிர்ப்பு விமர்சனத்தின் இரண்டு முக்கிய கோரிக்கைகள் காணப்பட்டன. முதலாவதாக, சட்டம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதன் மூலம் அரசியலை மக்களுக்குப் பொறுப்பாக்குதல், இரண்டாவது ஆள்பவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்தல் என்பனவாகும்.

ஆரம்பத்திலிருந்தே, தேசிய மக்கள் அரசாங்கம் இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளது. இது, பல முன்னாள் செல்வாக்குமிக்க அரசியல்வாதிகளைப் பொதுநிதியை முறைகேடு செய்த குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்றத்தின் முன் நிறுத்தும் பரந்த ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு வித்திட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது, சிறிலங்க வரலாற்றில் முதற்தடவையாக முன்னாள் அரச தலைவர் குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்காக சட்டத்தின் முன் நிறுத்தப்பட்ட திருப்புமுனையாகும். அரசியல் பதவிகளில் உள்ளவர்களின் சலுகைகளைக் கட்டுப்படுத்தும் பல சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சர்ச்சைக்குரிய ஓய்வூதியத் திட்டம் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகள் குறைக்கப்பட்டுள்ளன. அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆடம்பரமான பங்களாக்கள் பொது நோக்கங்களுக்காக மாற்றப்பட்டுள்ளன. அரசியலில் நேர்மை மற்றும் நம்பகத்தன்மையை நிலைநாட்டும் இந்த நடவடிக்கைகள், ஜனநாயகத்தின் தரத்தை மேம்படுத்துவதில் திருப்திகரமான பதிவைக் காட்டுகின்றன.

பொருளாதார சவால்களும் முரண்பாடுகளும் தொடரும் நிலைமையே உள்ளது. குறிப்பாக அநுர அரசாங்கம் பல இக்கட்டான நிலைமைகளையும், சவால்களையும் பொருளாதாரத்துறையில் எதிர்கொண்டுள்ளது. 2022 பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, நாடு சர்வதேச நாணய நிதியத்தின் மீட்புத் திட்டத்தின் கீழ் கடுமையான நிதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுள்ளது. மேலும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் புதிய அரசாங்கம் பதவியேற்பதற்கு சில நாட்களுக்கு முன் சர்வதேசக்கடன் வழங்குநர்களுடன் மேற்கொண்ட கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் அதிக நிவாரணம் அளிக்காத நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைத் தெரிவுகளுக்குச் சிறிய நெகிழ்வுத்தன்மையே உள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொருளாதாரப் பாதை, சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பில் தொடர்ச்சியைக் கொண்டிருந்தாலும், ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் மானியங்களை அதிகரித்தல், வரிகளைக் குறைத்தல் மற்றும் பொதுத்துறை ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.

மேலும், முன்னர் தொடங்கப்பட்ட பெரியளவிலான தனியார் மயமாக்கல் செயல்முறையை இடைநிறுத்தி, அரச நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சர்வதேசப் பொருளாதார ஒழுங்கின் தற்போதைய சூழ்நிலைகளில், முற்போக்கு நோக்குடைய அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டிய சிக்கல்களையும் அரசாங்கம் எதிர்கொள்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுடன் மோதல் போக்கைத் தவிர்ப்பது நடைமுறைச் சமரசமாகத் தெரிகிறது. ஆனால், அரசின் வழிகாட்டுதலுடன் உற்பத்திசார்ந்த பொருளாதாரத்தை உருவாக்கும் தேசிய மக்கள் சக்த்தியின் இலக்கிற்கும், சர்வதேசப் பொருளாதாரச் சூழலின் தடைகளுக்கும் இடையிலான பதட்டங்கள் தொடரும் நிலைமையே நீடிக்கின்றது.

தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருங்கிணைப்புதேசியப் பிரச்சினையைக் கையாள்வதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னர் இருந்த அரசாங்கங்களை விடவும் மோசமான அணுகுமுறையையே கொண்டுள்ளது.

மாகாண சுயாட்சியை வலியுறுத்தும் தாராளவாத சமாதானக் கட்டமைப்பு பற்றி கவனம் செலுத்துவதாக கூறினாலும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு தயாராக இல்லை. அதேபோன்று ராஜபக்ஷக்கள் உள்ளிட்ட ஏனைய தலைவர்கள் முன்னெடுத்த சிங்கள தேசியவாத பெரும்பான்மைவாதத் தீர்வு என்பதில் உறுதியாகவே உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் குறிப்பிடத்தக்க மக்கள் தளத்தை அநுர அரசு பெற்றிருந்தாலும் அதன் எழுச்சி, சிங்களத் தேசியவாதத்துடன் பிணைந்திருப்பதானது தமிழ் மக்களுக்கு ஏமாற்றமளிப்பதாகவே உள்ளது.

ஆனால் அநுர அரசாங்கம் தாங்கள் பாகுபாடற்ற அரசாங்கம் என்ற பிம்பத்தைப் பேணுதல், உள்நாட்டுப் போருடன் தொடர்புடைய மனிதநேயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துதல், மற்றும் வடக்கு, கிழக்கின் பொருளாதார, சமூக உட்கட்டமைப்பு மேம்பாட்டில் கவனம் செலுத்துதல் ஆகிய விடயங்களில் கவனம் செலுத்துவதாகவே மீண்டும் மீண்டும் கூறினாலும் செயற்பாட்டில் எந்த விளைவுகளும் ஏற்படுத்தப்படவில்லை.

குறிப்பாக, பாதிக்கப்பட்ட காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் சர்வதேச நிதிப்பொறிமுறைகளை கோரி நிற்கின்ற நிலையில், அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறையை மையப்படுத்திய வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை கண்டறிவதற்கான அலுவலகம் 10500 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை முடிப்பதற்கு 375 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கும் அமைச்சரவை முடிவெடுத்துள்ளமையானது, பலத்த ஏமாற்றமளிக்கும் செயற்படாகும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது, மையிலிட்டித் துறைமுகம், சர்வதேச கிரிக்கெட் மைதானம் போன்ற பல அபிவிருத்தித் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். வடக்கில் அரசாங்கத்தின் அபிவிருத்திகள் பற்றிய கவனம், சிங்களப் பெரும்பான்மைவாதக் கருத்துக்களிலிருந்து விலகி, சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை என்ற சொல்லாடலுடன் இணைந்திருப்பது ராஜபக்சாக்களின் அபிவிருத்திவாதத்திலிருந்து வேறுபடுகிறது.

ஆனாலும் அதிகாரப்பகிர்வு என்ற அரசியலமைப்புச் சட்டப் பிரச்சினையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிக்கு அமைவாக ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு உறுதியளித்த போதிலும், அந்த விவகாரத்தில் ஈடுபடுவதை வெளிப்படையாகத் தவிர்க்கும் நிலைமையே காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீளளிப்பதில் காணப்படும் தாமதம், வட,கிழக்கில் முழுமையான இராணுவ நீக்கம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கேற்ப மாற்றுதல், மற்றும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் போன்ற உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் ஆமைவேகமே நீடிக்கின்றது.

அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஓராண்டுப் பயணம், ஜனநாயக விழுமியங்களை மீட்டெடுத்தல், ஊழலைக் கட்டுப்படுத்துதல், போதைப்பொருளுக்கு எதிரான செயற்பாடுகள், ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றங்களை கட்டுப்படுத்தல் போன்ற அரசியல் நவீனமயமாக்கல் சட்ட ஆட்சியை வலுப்படுத்தல் நோக்கிய நகர்வுகளை வெளிப்படுத்துகிறது

ஆனால் குறித்த விடயங்களில் முன்னெடுக்கப்படும் நவீனமயமாக்கலுக்கும் முற்போக்கான பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கும் இடையிலான தொடர்பைப் பேணுவதும், அதனை உண்மையான தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டமாக வளர்த்தெடுப்பதும் தேசிய இனப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்விலேயே ஆகும். இந்தப் புரிதல் இன்னமும் அநுர தரப்புக்கு ஏற்படாதிருப்பது தான் சவாலான விடயமாகும்.

# இசைப்பிரியா படுகொலை: பொன்சேகாவின் உள்நோக்கம் என்ன?



தந்திரீகன்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டங்களில் இலங்கை இராணுவத்திற்குத் தலைமை தாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அண்மையில் ஊடகவியலாளர் தரிந்து ஜெயவர்த்தனவுக்கு அளித்த செவ்வி மூலம் வெளியிட்ட தகவல்கள், இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் புதிய சர்ச்சைகளையும், கேள்விகளையும் எழுப்பியுள்ளன.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசாங்கம் 'நம்பகமான உள்ளக விசாரணை' ஒன்றை அமைப்பதற்கு வாக்குறுதி அளித்திருக்கும் இந்தத் தருணத்தில், பொன்சேகாவின் இறுதிப்போர் பற்றிய பகிரங்கப்படுத்தல்களின் உள்நோக்கங்களைப் புரிந்துகொள்வது, தற்போதைய சூழ்நிலைக்கு அவசியமானதாக உள்ளது.

கடந்த காலங்களில், போர்க்குற்ற மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை அல்லது கலப்பு விசாரணைப் பொறிமுறை பற்றிய யோசனைகள் முன்மொழியப்பட்டபோது சரத் பொன்சேகா மௌனம் காத்திருந்தார். போரின் மூலோபாயத் திட்டங்களுக்கும், அதன் விளைவான மீறல்களுக்கும் அவர் பொறுப்பேற்க வேண்டியவராக இருந்தபோதும், தன்னை அந்தப் பொறுப்பிலிருந்து விலக்கி வைத்திருந்தார்.

ஆனால், தற்போது இலங்கை அரசாங்கம் ஜெனிவாவில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய அழுத்தத்தில் உள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள், சர்வதேசத்தை சமாதானப்படுத்துவதற்காக, பெயரளவில் உள்ளக விசாரணைப் பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் அதிகமாகவே உள்ளன.

அத்தகையதொரு பொறிமுறை அமைக்கப்பட்டால், போருக்குத் தலைமை தாங்கியவர் என்ற முறையில், பொன்சேகா அதன் முன் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பது வெளிப்படையான யதார்த்தமாகும்.

நம்பகமானதொரு விசாரணைப் பொறிமுறையை அவர் எதிர்கொள்ளும் போது,அவரது நிலை கேள்விக்குறியாகும். எனவே, பொன்சேகா இப்போது தகவல்களை வெளியிடுவது, வரவிருக்கும் விசாரணைகளில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் தற்காப்பு நடவடிக்கையின் பகுதியாகவும், தனது அரசியல் எதிரிகளைப் பலவீனப்படுத்தும் அரசியல் கணக்காகவும் இருக்கலாம்.

அவர் கூறும் தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்று ஏற்றுக்கொள்வது சாத்தியமில்லை. ஏனெனில், அவர் இன்னமும் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள மறுக்கிறார்; கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடந்தது என்பதை முழுமையாக எதிர்க்கிறார். அவ்வித மான நிலையில் அவர் கூறுவதெல்லாம் உண்மை என்று ஏற்றுக் கொள்வது கடினம்.

இருப்பினும் சரத் பொன்சேகா தற்போது வெளியிட்டுள்ள மிக முக்கியமான தகவல், தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் ஊடகவியலாளராக செயற்பட்ட இசைப்பிரியா படுகொலை தொடர்பானது. இந்தக் கொலைக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவின் குழுவினரே காரணம் என்று அவர் உறுதியாகக் கூறியிருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டுகளில் தெளிவானதொரு அரசியல் கணக்கு அடங்கியுள்ளது. மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண, ராஜபக்ஷவினருக்கு மிகவும் நெருக்கமானவர். அவரை நேரடியாகச் சிக்கவைப்பதன் மூலம், பொன்சேகா ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் தளபதிகள் மீது கவனத்தைத் திருப்புகிறார் என்ற இயல்பான சந்தேகம் இங்கு காணப்படுகிறது.

அத்துடன், வன்னிப் படைகளின் தளபதியாக இருந்த ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராகவும் பொன்சேகா குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

தனது கருத்தைப் பொருட்படுத்தாமல், குற்றச்சாட்டுகளைப் பொருட்படுத்தாமல் மஹிந்த ராஜபக்ஷவால் ஜயசூரிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார் என்று அவர் குறிப்பிடுகிறார்.

போரின் இறுதியில் சரணடைந்தவர்களைக் கையாண்ட படைகளின் தளபதியாக இருந்தவர் ஜகத் ஜயசூரிய என்பது முக்கியமானதொரு விடயமாகும். இந்தக் குற்றச்சாட்டுகள் பழைய பதவி மோதல்கள் மற்றும் அரசியல் பகையின் தொடர்ச்சியாகவே பார்க்கப் படுகின்றன.

அதேவேளை, களமுனையில் போரை வென்று கொடுத்த மேஜர் ஜெனரல்கள் சவேந்திர சில்வா, கமல் குணரத்ன, ஷாஜி கல்லகே போன்ற முன்னணிப் போர் அதிகாரிகளுக்கு எதிராக பொன்சேகா எந்தத் தகவல்களையும் வெளியிடாமல் அமைதிகாக்கிறார்.

அவர்களைத் தவிர்ப்பது, பொன்சேகா தனது போர்த் திட்டத்தை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு எதிராகப் பேசுவதைத் தவிர்க்கிறார் என்பதைக் காட்டுகிறது. இசைப்பிரியா படுகொலை விவகாரத்தில், களமுனையில் இருந்தவர்களைப் பலிகடாவாக்காமல், ராஜபக்ஷ குடும்பத்திற்கு நெருக்கமான புலனாய்வுப் பிரிவின் அதிகாரியை மட்டும் அவர் குற்றஞ்சாட்டுவது, உண்மையில் குற்றம் இழைத்தவர்களைத் தண்டிப்பதை விட, அரசியல் கணக்குகளுக்கு முதலிடம் கொடுப்பதையே காட்டுகிறது.

மிக முக்கியமாக, ஒரு முன்னாள் இராணுவத் தளபதி, கொலையாளியின் பெயரை பகிரங்கமாக வெளியிட்ட பின்னரும், சிறிலங்கா அரசாங்கமோ அல்லது பொலிஸ் துறையோ இது குறித்து எந்தவொரு அக்கறையும் காண்பிக்கவில்லை.

தமிழ் ஊடகவியலாளர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர் தொடர்பான குற்றச்சாட்டுகளை இந்த அரசாங்கமும் அலட்சியத்துடன் தான் அணுகுகிறது.

இது, தற்போதைய அரசாங்கமும் தண்டனை விலக்குக் கலாசாரத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கிறது என்பதையே நிரூபிக்கிறது.

சரத் பொன்சேகா அரசாங்கத்துக்கு நெருக்கமானவராக இருந்தாலும், பொறுப்புக்கூறல் விடயத்தில் அவருடன் இணைந்து உண்மையைக் கண்டறிய அரசாங்கம் தயாராக இல்லை என்றே தெரிகிறது.

அவ்வாறான நிலையில், சரத் பொன்சேகாவின் இந்தக் காலந்தாழ்த்திய தகவல்கள், சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ளும் ஒரு அரசியல் நெருக்கடிச் சூழலில், தனிப்பட்ட சுயபாதுகாப்பு, அரசியல் பகையைத் தீர்த்துக்கொள்ளும் உள்நோக்கம், மற்றும் ராஜபக்ஷ அணியை பலவீனப்படுத்தும் முயற்சி ஆகிய மூன்றின் கலவையாகவே வெளிப்படுகிறது.

குற்றமிழைத்தவர்களைப் பொறுப்புக்கூற வைக்கும் கடப்பாட்டையும், அதற்கான வாக்குறுதியையும் அரசாங்கம் நிறைவேற்றுமா என்பது இந்தச் சூழலில் மிகவும் சந்தேகத்திற்குரியது. இத்தகைய தகவல்கள் நீர்த்துப் போகாமல், அரசாங்கம் நம்பகமான, பக்கச்சார்பற்ற விசாரணை மூலம் நீதியை நிலைநாட்டுமா என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் கேள்வியாக உள்ளது.

ஆனால் சரத்பொன்சேகா குறித்த தகவல்களை வெளிப்படுத்தி கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாகின்ற போதும் இதுவரையில் எவ்விதமான சமிக்ஞைகளையும் அரசாங்கம் வெளியிடவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகின்றது.

அதுமட்டுமன்றி, தற்போதைய அரச அதிகாரிகளும் சரி, பாதுகாப்பு பிரிவுகளின் முக்கிய பிரதானிகளும் சரி அனைவருமே ராஜபக்ஷக்களின் காலத்தில் தான் ஆசனங்களில் அமர்ந்தவர்கள்.

ஆகவே, அந்த அதிகாரிகள் தேசிய மக்கள் சக்தி நேர்மையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முனைந்தாலும் கூட, அதிகாரிகள் மட்டத்தில் முட்டுக்கட்டைகளையே ஏற்படுத்துவார்கள் என்பது வெளிப்படையானது.

அவ்விதமான நிலைமைகள் ஏற்படுகின்றபோது, எந்தவொரு சமயத்திலும் பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்பதற்காக படைகளின் அதிகாரிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஏனென்றால் அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான வெளியக பொறிமுறைகளை முழுமையாக நிராகரித்துள்ளதோடுள்ளதோடு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தினை முற்றாக நிராகரித்துள்ளமையும் குறிப் பிடத்தக்கதாகும்.

# ஜெனீவாத் தீர்மானத்தைப் புறக்கணித்த ஸ்ரீலங்கா
# இனவழிப்பைத் தொடர்கின்ற சமிக்ஞையே

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் கண்டனம்



படம் : இணையம்




ஸ்ரீலங்கா அதிபர் அனுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியில் அமைதியாகத் தொடரும் இனவழிப்புக் கண்டு சர்வதேச சமூகம் வேடிக்கை பார்க்கிறது என்றும் ஸ்ரீலங்கா அரசு ஜெனீவாத் தீர்மானத்தைப் புறக்கணித்திருப்பதன் ஊடாக தாம் இனவழிப்பை தொடர்கின்றோம் என்ற சமிக்ஞையைக் காட்டியள்ளது என்றும் நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் தெரிவித்துள்ளது. அண்மையில் ஶ்ரீலங்கா தொடர்பில் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

### ஜெனீவாத் தீர்மானம்

“ஜெனீவா மனித உரிமை பேரவையின் 60ஆவது அமர்வில் இலங்கை குறித்த புதிய தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக தீர்மானமொன்றை கனடா ஜேர்மனி மசெடோனியா மொன்டினீக்ரோ மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் சமர்ப்பித்தன.

இலங்கையில் இனவழிப்புப் போர் நிறைவுபெற்று 16 ஆண்டுகள் ஆகின்ற நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பல தீர்மானங்கள் ஸ்ரீலங்கா அரசு தொடர்பில் நிறைவேற்றப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் கண்ணீரோடும் விடைதெரியாத கேள்விகளுடனும் வாழ்ந்து வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக, உறவுகளுக்காக மக்கள் தொடர்ந்தும் வீதிகளில் நின்றே போராடுகிறார்கள். என்றபோதும் ஶ்ரீலங்கா அரசு இந்த மக்களைத் தொடர்ந்து கணக்கெடுக்காமல் இருந்து வருகிறது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபை – சர்வதேச சமூகம் நீதியை வழங்கும் என்று தமிழ் மக்கள் நம்பிக் காத்திருந்த நிலையிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### நிராகரித்த ஸ்ரீலங்கா

மனித உரிமைகள் பேரவையின் 57/1 தீர்மானத்தை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை என்று இலங்கையின் பிரதிநிதித்துவ அலுவலகம் கூறியுள்ளது. அத்துடன் இந்தத் தீர்மானத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டத்தைத் தாம் தொடர்ந்து எதிர்பார்ப்பதாகவும் இலங்கை தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது. இது போன்ற வெளிப்புறத் திட்டங்கள், குறிப்பாக உள்நாட்டு நல்லிணக்க முயற்சிகளுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது. இதன் மூலம் கடந்த கால அரசுகள் போலவே அனுர அரசும் இனப்படுகொலை விவகாரத்தில் ஜெனீவாவின் காய்களை நகர்த்தி வருகின்றமை தெளிவாகியுள்ளது.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடனும், அதன் நிரந்தர மனித உரிமைகள் பொறிமுறைகளுடனும் இலங்கை நெருக்கமான ஒத்துழைப்பைப் பேணி வருவதாகவும் இலங்கை தொடர்பான மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும், சமநிலையுடனும், அமைய வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா அரசு மனித உரிமைகள் பேரவைக்கே புத்திமதி கூறியிருக்கிறது. ஸ்ரீலங்காவின் மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்தும், ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கு ஸ்ரீலங்கா அரசு எடுத்துக் கூறி இருக்கின்றாம்.

### ஐ.நாவின் துரோகம்

ஊலகம் எங்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்காமல் ஒரு வெற்று அமைப்பாக ஐ.நா செயல்படுகிறது. அத்துடன் உலகில் அழிப்புக்களையும் ஒடுக்குமுறைகளையும் மேற்கொள்ளுகின்றநாடுகளைப்பாதுகாக்கின்ற வேலையைத்தான் ஐ.நா செய்கிறது. அப்படித்தான் ஸ்ரீலங்காவையும் ஐ.நா அணுகுகிறது. அனுரகுமார ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்கும் மேலாகியும், தமிழ் மக்கள் மத்தியில் – சர்வதேசத்திற்கு வாக்குறுதியளிக்கப்பட்ட சீர்திருத்தத்தில் சிறிதளவேனும் நிறைவேறவில்லை என சர்வதேச ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலையில் ஐ.நா தமிழர்களுக்கு துரொகம் இழைப்பதை பன்னாட்டு ஊடகம் ஒன்று வெளிச்சப்படுத்தியுள்ளது.

தமிழர் பிரச்சினை, பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிப்பதாகவும், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவிப்பதாகவும், இறுதியாக இன மோதலுக்கு ஒரு தீர்வை வழங்குவதாகவும் அநுரகுமார திசாநாயக்க கூறியிருந்தார். ஆனால் உலகின் மிகப்பெரிய தனிநபர் இராணுவங்களில் ஒன்றான இலங்கை இராணுவம், வடக்கு, கிழக்கு முழுவதும் பரந்த அளவிலான நிலங்களை இன்னும் ஆக்கிரமித்துள்ளது. காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்கள் பற்றிய தகவல்களைக் கோரி தமிழ் தாய்மார்கள் தங்கள் போராட்டங்களைத் தொடர்கின்றனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் தொடர்கின்றன என்பதையும் பன்னாட்டு ஊடகம் கவனப்படுத்தியுள்ளது.

### கடமை தவறும் ஐ.நா

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் கூட, இலங்கை அரசாங்கம் அதற்கு முந்திய ஆட்சிகளைப் போலவே, தீர்மானத்தை நிராகரிப்பதிலும், சர்வதேசமயமாக்கப்பட்ட பொறுப்புக்கூறல் பொறிமுறையை நோக்கிய எந்தவொரு நகர்வுக்கும் செல்வதில்லை என்பதிலும் உறுதியாக இருந்தது. இதனால் தமிழர்களின் சீற்றம் அதிகரிக்கிறது. எனவே, ஜெனீவாவின் தீர்மானம், தமிழர்களின் அழைப்புகள், செவிடர் காதில் விழுந்ததையே தெளிவுபடுத்தியது.

நிலையான எதிர்கால அமைதி கட்டியெழுப்பப்பட வேண்டும். அத்துடன் 2009ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற குற்றங்கள் தண்டிக்கப்படாமல் விடப்பட முடியாது. எனவே, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற பல்வேறு உலகளாவிய மன்றங்களுக்கு நகர்த்த வேண்டும். அதேநேரம், முள்ளிவாய்க்காலில் நடந்த படுகொலைகளுக்குப் பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு, ஐக்கிய நாடுகள் சபை செயல்பட முடியாவிட்டால், மற்றவர்கள் செயற்பட வேண்டும் என்றும் சர்வதேச ஊடகம் வலியுறுத்தியுள்ளமையை இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

ஈழத்தில் சிங்கள அரசின் இனப்படுகொலை கண்ணுக்குத் தெரியாத அளவில் தொடர்கின்ற அதேவேளை கடந்த கால இனப்படுகொலைகளை மறைக்க மகிந்த அரசுகளை விஞ்சிய வகையில் அனுர அரசு காய்களை நகர்த்தி வருகின்றது. ஜெனீவா தீர்மான நிராகரிப்பும் அதனையே புலப்படுத்துகிறது. இந்த நிலையில் மென்மையான தீர்மானத்தின் வழி ஸ்ரீலங்காவை தொடர்ந்து இனவழிப்புக்கு ஐ.நா தூண்டுகிறது. எனவே ஸ்ரீலங்காவை பன்னாட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த சர்வதேச சமூகம் முன்வர வேண்டும். அதன் ஊடாகவே ஈழத்தில் தொடர்கின்ற அநீதிகளை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்....” என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்காவின் பெருமுடக்கம்;

## 'ட்ரம்பின் உள்நாட்டுப் பிடிவாதமும் உலகளாவிய பூசல்களும்'



பூலோகன்

ஒரு பெரிய வீட்டில் ஈகோ பிடித்த பெரியவர்கள் வாழ்வது போல, தற்போது உலகின் மிகவும் சக்திவாய்ந்த நாடான அமெரிக்காவில், அரசியல் பிடிவாதத்தால் அரசாங்கத்தின் நிர்வாகப் பொறிமுறை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

ஒரு வீட்டில் காசு இல்லாமல் இல்லை, ஆனால் அதைக் 'காங்கிரஸ்' செலவு செய்வதற்கு அனுமதி அளிப்பதில் பிரச்சினை காணப்படுகிறது. ஒரு தரப்புக்கு செலவழிக்க ஒப்புதல் அளிப்போம் என்றால், மற்றவர் மறுதலிப்பார், வேறொரு தேவை நோக்கி விரல் நீட்டுவார்.

இந்தச் சண்டைகள் முற்றி, செலவுகள் வெட்டப்படுகின்றன. சமையற்காரர், வீட்டைத் துப்புரவாக்கும் தொழிலாளி, காவலர்கள் என்று அத்தியாவசியமற்ற ஊழியர்களின் சம்பளங்களும், கொடுப்பனவுகளும் நிறுத்தப்படுகின்றன. இதுவே அமெரிக்க அரசாங்கத்தின் முடக்க நிலை ஆகும்.

இது அரசியல் கட்சிகள் மத்தியிலான ஆழமான பிளவை உலகறியச் செய்துள்ளதுடன், அமெரிக்க ஜனநாயகத்தின் முக்கியமான பலவீனத்தை மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டுகிறது.

அமெரிக்காவின் நிதியாண்டு ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பித்துள்ளது. அன்றைய தினத்துக்குள் செலவினங்களுக்கான பிரேரணைகளை காங்கிரஸ் நிறைவேற்றாவிட்டால், மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள நிறுவனங்களும், திணைக்களங்களும் அத்தியாவசியமற்ற பணிகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

இந்த முடக்க நிலைக்கு மூல காரணம் பொருளாதார நெருக்கடியல்ல, மாறாக, அரசியல் ரீதியான பிடிவாதம் தான். அமெரிக்காவின் ஆட்சி நிர்வாகம் கட்சி ரீதியாகப் பிளவுபட்ட ஒரு சிக்கலான பொறிமுறைக்குள் நிறைவேற்றப்படுகிறது.

வெள்ளை மாளிகை ஒரு திட்டத்தைத் தயாரிக்கலாம், ஆனால் அந்தத் திட்டம் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான பிரதிநிதிகள் சபையிலும் மேலவையான செனட் சபையிலும் நிறைவேறுவது அவசியமாகும்.

தற்போதைய சூழலில் டொனால்ட் ட்ரம்பின் குடியரசுக் கட்சிக்கு இரு சபைகளிலும் பெரும்பான்மைப் பலம் இருந்தும், செலவினப் பிரேரணையை நிறைவேற்ற செனட் சபையின் 100 அங்கத்தவர்களில் குறைந்தபட்சம் 60 வாக்குகளைப் பெறுவது அவசியம்.

குடியரசுக் கட்சிக்கு அந்தளவு பலம் கிடையாது என்பதால், இந்த அரசியல் பலவீனத்தை ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் பேரம் பேசும் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். வரிக் கொள்கைகள், சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள், குடியேற்றச் சட்டங்கள் என்று எல்லாவற்றிலும் பேரம் பேசும் பிடிவாதம் மேலெழுப்பப்பப்படுவதால், அரச செலவினங்களுக்கு நிதி பெறுவது பின்னடைவைச் சந்திக்கிறது. இந்தப் பிளவுகளால் பாராளுமன்றம் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்படும்போது, என் கட்சி பெரிதா, உன் கட்சி பெரிதா என்ற அரசியல் சண்டை பெரிதாகி விடுகிறது.

இதனால் ஏற்படும் முடக்கநிலையில் அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டாலும், அதன் விளைவுகள் உள்நாட்டிலும் வெளியேயும் பாரதூரமானவை. அத்தியாவசியப் பணியாளர்களுக்கு முடக்கநிலை ஓயும் வரை சம்பளம் கிடைக்காது.

அத்தியாவசியமற்ற சேவைகளில் ஈடுபடும் இலட்சக்கணக்கான மத்திய அரசு ஊழியர்கள் சம்பளம் இன்றி வீட்டுக்கு அனுப்பப்படலாம் என வெள்ளை மாளிகை எச்சரித்துள்ளது. மறுபுறம், கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் தாமதமடையும், கடன்களுக்காக விண்ணப்பித்தவர்கள் நீண்டகாலம் காத்திருக்க நேரிடும், விஞ்ஞான ஆராய்ச்சிகள் இடைநிறுத்தப்படும், தேசியப் பூங்காக்களும் அருங்காட்சியகங்களும் மூடப்படும்.

இந்நிலை, நிதிச் சந்தைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், வீட்டுக்கு அனுப்பப்படும் பணியாளர்கள் பொருளாதாரத்திற்குச் சுமையாகவும் மாறக்கூடும். கண் பார்வைக்கு எட்டிய தூரத்தில் கூட தீர்வு தென்படாத நிலையில், எந்தக் கட்சியும் விட்டுக்கொடுப்பிற்கு இணங்கிப் போகும் சாத்தியமில்லை. பிடிவாதம் சில நாட்கள் நீடிக்கலாம், மாதக்கணக்கில் இழுபறியடையக்கூடிய சாத்தியமும் இல்லாமல் இல்லை.

உள்நாட்டு அரசியல் பிடிவாதம் ஒரு புறம் இருக்க, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சர்வதேச விவகாரங்களிலும் தனது 'அமெரிக்கா முதலில்' என்ற தேசியவாதப் பொருளாதாரக் கொள்கையால் அடிக்கடி பூசல்களை ஏற்படுத்தி வருகிறார். அவரது பிடிவாதம் பல நட்பு நாடுகளுடனான உறவுகளையும் பாதித்துள்ளது.

உதாரணமாக, கனடாவுடனான உறவில் ட்ரம்பின் நிலைப்பாடு, அவரது அரசியல் ஈகோவின் மற்றொரு வெளிப்பாடாகும். நீண்டகால நட்பு நாடான கனடாவுடன் வர்த்தகம், குறிப்பாக கனடிய அலுமினியம் மற்றும் உருக்கு இறக்குமதி மீதான வரிகள் விதிப்பதில் அவர் கடுமையான பிடிவாதம் காட்டினார்.

இது வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் போன்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது மிகவும் வெளிப்படையாக இருந்தது. அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடுகளை பொருளாதார ரீதியில் அழுத்தங்களுக்கு உள்ளாக்குவதன் மூலம் தனது தேசியவாதப் பொருளாதார இலக்குகளை அடைய ட்ரம்ப் முயல்வது, உள்நாட்டில் அவர் பின்பற்றும் கட்சி ரீதியிலான பிடிவாதத்தின் சர்வதேச வெளிப்பாடாகும்.

இதேவேளை, ஜனாதிபதி ட்ரம்பின் மலேசிய விஜயமானது சற்று வித்தியாசமான ஒரு கோணத்தை அளிக்கிறது. ஆசியான் கூட்டமைப்பில் முக்கியமானதொரு நாடான மலேசியாவின் பொருளாதார மற்றும் மூலோபாய முக்கியத்துவத்தை உணர்ந்து ட்ரம்ப் விஜயம் செய்த போதிலும், அந்த விஜயத்தின் பிரதான நோக்கம் அமெரிக்கப் பொருளாதார நலன்களை மையமாகக் கொண்டதாகவே இருந்தது.

குறிப்பாக, சீனாவிற்கு எதிராக ஆசியபசுபிக் பிராந்தியத்தில் வர்த்தக மற்றும் பாதுகாப்பு நலன்களைப் பேணுவது ட்ரம்பின் நோக்கமாக இருந்தது. இருப்பினும், உள்நாட்டில் செலவினப் பிரேரணையை நிறைவேற்ற முடியாமல் ஜனநாயகம் முடங்கிக்கிடக்கும் நிலையில், சர்வதேச அரங்கில் அவர் தனது நாட்டின் வலிமையையும், பிடிவாதமான கொள்கைகளையும் முன்னெடுத்துச் செல்வது, முரண்பாடுகளின் உச்சமாக உள்ளது.

உள்நாட்டில் ஆட்சி நிர்வாகத்தின் அடிப்படைக் கடமையை நிறைவேற்ற முடியாத ஒரு தலைவர், சர்வதேச அளவில் தனது கொள்கைகளை நிலைநாட்ட முயல்வது, அமெரிக்காவின் நம்பகத்தன்மை மீதான கேள்விகளை எழுப்புகிறது.

'ஜனநாயகத்தின் உச்சத்தில்;' இருப்பதாகப் பீற்றிக்கொள்ளும் அமெரிக்கத் தேசம், தற்போது முடங்கிக் கிடக்கிறது. இதனை முடக்கியது எந்தவொரு வெளிச் சக்தியும் அல்ல.

மாறாக, அரசியல் கட்சிகளின் பூசலும், சண்டையுமே. ஆட்சி நிர்வாகம் என்பது அடிப்படைக் கடமையென்றால், அது அரசியல் கட்சிகளுக்கு மத்தியிலான அடிதடிக்குள் விழுங்கப்பட்டு விடுகிறது.

இரு பிரதான கட்சிகள் கொள்கைகளுக்காக பிடிவாதத்துடன் வீணான சண்டையிட்டுக் கொள்கையில், ஒரு தேசத்தின் ஆட்சி நிர்வாகப் பொறிமுறை ஸ்தம்பிதம் அடைந்து, அதன் ஸ்திரத்தன்மை சீர்குலைகிறது.

அத்துடன், பிரஜைகளின் நலன்களும் பாதிக்கப்படுகின்ற இந்தச் சூழலில், அத்தகைய பிடிவாதம் கேள்விக்குரியது. தனிமனித வாழ்க்கையாக இருந்தாலும், தலைசிறந்ததாகப் பீற்றிக் கொள்ளும் பெருதேசத்தின் ஆட்சி நிர்வாகமாக இருந்தாலும், விட்டுக் கொடுத்தல் என்பது கெட்ட வார்த்தை இல்லை.

அது கெட்ட வார்த்தையாக மாறும்போது, ஜனநாயக நெறிமுறைகள் தகர்ந்து விடும் என்பதை ஒட்டுமொத்த உலகிற்கும் எடுத்துரைக்க அமெரிக்க அரசாங்கத்தின் முடக்கநிலை சிறந்த உதாரணம் எனலாம்.

இந்த முடக்கநிலை, தாம் வாக்குகளால் தெரிவுசெய்த அரசாங்கத்தையே மக்கள் நம்பாதிருக்கும் ஒரு அபாயகரமான நிலையை உருவாக்குகிறது. இதனை அமெரிக்கா ஜனநாயகமாக சித்தரிக்குமாக இருந்தால் அது மிகப்பெரிய பரிதாபம் தான்.


























நமது ஈழநாடு வாழ்வாதார உதவிட்டத்தில் இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களிற்கு வாழ்வாதார உணவுப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டது. மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் செயற்பாட்டாளர்களான முஹமட் மலிக், மஹமட் ரிஷ்விக், மிரிஷா திசநாயக்க, டிலினா மற்றும் மதுசங்க பியசிறி ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் மேற்படி தெரிவு செய்யப்பட்ட மாவீரர் மற்றும் முன்னாள் போராளிகள் குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.







